சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 12

## Covid – 19 இடர் வீடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி – 4.10 : கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வாரம் - **August 23 – 27** தயாரிப்பு : **சஜித்.sp**

**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** **BBA(Financial Spl), University of Colombo**

**1.** வர்மா நிறுவனத்தின் 01.01.2021 இல் காணப்பட்ட வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் வியாபார வருமதிகள் பட்டியல் மீதியும் சமமாக காணப்பட்டது. எனினும் 31.01.2021 இல வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கு ரூபா 110 000 மீதியினை காட்டியது. இத்தினத்தில் உள்ளப்படியான வியாபார வருமதிகள் பேரேட்டு மீதிகளின் மொத்தம் ரூபா 119 000 மீதியாக காட்டியது. கணக்கு பரிசீலனையின் போது இவ்விரு மீதிகளும் வேறுபடுவதற்குரிய காரணங்கள் பின்வருமாறு:

1. அபினவ் எனும் கடன்பட்டோருக்கான விற்பனை ரூபா 25 000 விற்பனை நாட்குறிப்பேட்டில் ரூபா 52 000 என பதியப்பட்டது.
2. கடன்பட்டோர் ஒருவரின் வரவு மீதி ரூபா 5 000 கடன்பட்டோர் பட்டியல் மீதியிற்கு செலவு மீதியாக கொண்டு செல்லப்பட்டது.
3. கடன்பட்டோர் ஒருவரின் மீதியின் மீது விதித்த வட்டி ரூபா 12 000 தொடர்பாக உரிய கட்டுப்பாட்டுக் கணக்கில் எப்பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை.
4. அஸ்வினி எனும் கடன்பட்டோரிடமிருந்து பெற்று மறுக்கப்பட்ட காசோலை ரூபா 20 000 அஸ்வனியின் தனிப்பட்ட கணக்கில் ரூபா 2 000 என பதியப்பட்டிருந்தது.
5. அன்வரிடமிருந்தான விற்பனை திரும்பல் ரூபா 25 000 விற்பனை திரும்பல் நாளேட்டில் சரியாகக் பதியப்பட்ட போதும் கடன்பட்டோர் பேரேட்டில் உள்ள அன்வரின் கணக்கில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது:**

**1)** திருத்திய வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கு
**2)** வியாபார வருமதிகளின் கணக்கினக்க கூற்று

**2.** சகிப் நிறுவனத்தின் 31.05.2021 இல் உள்ளப்படியான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு ரூபா 200 000 மீதியினை காட்டியது. இத்தினத்தில் உள்ளப்படியான கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தம் பிறிதொரு மீதியினை காட்டியது. இவ்விரு மீதிகளும் வேறுபடுவதற்குரிய காரணங்கள் பின்வருமாறு:

1. அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்ட ரூபா 45 000 கடன்பட்டோர் மீதியொன்று கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்படவில்லை.
2. விற்பனைப் பட்டியலொன்றின் ரூபா 45 000 விற்பனை நாளேட்டில் ரூபா 54 000 எனப் பதியப்பட்டியிருந்தது.
3. கடன்பட்டவரொருவர் நேரடியாக வங்கிக்குச் செலுத்திய ரூபா 28 000 கடன்பட்டோர் பேரேடு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகிய இரண்டும் பதியப்பட்டியிக்கவில்லை.
4. கடன்பட்டோர்களான மதன் வரவு மீதி ரூபா 10 000, சுதர் செலவு மீதி ரூபா 5 000 போன்றன கடன்பட்டோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
5. காசுப்பெறுவனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலின் கூட்டுமொத்தம் ரூபா 15 000 பொதுப்பேரேட்டுக்கு ரூபா 5 000 என மாற்றப்பட்டது.

**வேண்டப்படுவது:**

**1.** சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு
**2.** சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியிலிருந்து சீராக்க முன் கடன்பட்டோர் பட்டியல் மீதியினை இனங்காண்பதற்கான கணக்கினக்க கூற்று